3. கவன ஈர்ப்பு.

உணவகங்களில் பரிமாறப்படும் உணவுப்பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து.

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the restrictions imposed on serving items in meals in catering establishments in this State as published in the *Tamil Nadu Government Gazette* in February 1974.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டில், இந்திய அரசு சிக்கன நடவடிக்கைகள் குறித்து அப்போது செயலிலிருந்த ஆணைகளை ஆய்வு செய்த பின்னர், ஓட்டல்களிலும் பிற உணவகங்களிலும் பரிமாறப்படும் உணவு வகைகளின் மொத்த எண்ணிக்கை குறித்துக் கட்டுப்பாடுகள் விதிக்க முடிவு செய்தது. அதன்படி, மாதிரி உணவு (உணவகங்கள் பரிமாறும் உணவுமீதான கட்டுப்பாடுகள்) ஆணையின்படி ஒன்றை இந்திய அரசு, மாநில அரசுக்கு அனுப்பியதோடு அந்த மாதிரி ஆணையின் அடிப்படையில் ஆணை ஒன்று பிறப்பிக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டது.

2. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உணவு (உணவகங்கள் பரிமாறும் உணவு மீதான கட்டுப்பாடுகள்) ஆணையை மாநில அரசு 1974, சனவரி திங்களில் பிறப்பித்தது. இந்த ஆணைக்கிணங்க, உணவகங்களில் இரண்டு வகை உணவு மட்டுமே வழங்கப்பட வேண்டும், அவையாவன:

(அ) முக்கியமான உணவு ஒன்று, துணை உணவு ஒன்று அல்லது

(இ) துணை உணவு இரண்டு.

முக்கிய உணவில், மீன் அல்லது இறைச்சி அல்லது கோழிக்கறி அல்லது வேட்டை உணவு அல்லது இவற்றில் ஏதாவதொன்றினால் செய்யப்பட்ட கறி அல்லது காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கறியும், அரிசிச்சோறு அல்லது புலவு அல்லது சப்பாத்தி அல்லது பரோட்டா அல்லது பக்காரிகள் அல்லது பப்படம் அல்லது ரொட்டி அல்லது அரிசி அல்லது கோதுமை அல்லது பிற உணவு தானியங்களில் தயாரிக்கப்பட்ட உணவு வகையும் அடங்கும். கிச்சடி, பருப்பு, இரண்டு வகைக்கு மேற்படாத

காய்கறி ஆகியவை முக்கிய உணவின் ஒரு பகுதியாகப் பரிமாறப் படலாம். துணை உணவு என்பது, இனிப்பு வகையாக அல்லது கார வகையாக இருக்க வேண்டும். இதில் முக்கியமாக காய் கறிகள், பழங்கள் அல்லது முட்டைகள் அடங்கும். துணை உணவு வகையில் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு எதும் இருக்கக்கூடாது. ஆயினும், மேற் குறிப்பிட்ட இரண்டு வகை உணவுடன் கீழ்க்காணும் உணவு வகைகளும் பரிமாறப் படலாம். அவையாவன :—சூப் அல்லது ரசம், பிஸ்கட்டுகள், முந்திரிப்பருப்பு, பழப்பாகு, குளிர்பதனப் பெட்டியில் வைக்கப் பட்ட பழங்கள் உட்பட ஏனைய பழங்கள் அல்லது பழச்சாறு அல்லது காய்கறி சூப், பஜ்ஜி, பப்படம், சட்னி, ஊறுகாய், செய்தா, பதனப்பழச்சாறு (preserve) வெங்காயம், கீரை, நெய், வெண்ணெய், பாலேடு, தயிர், பாலாடைக்கட்டி, மோர், குழம்பு, முட்டையும் பாலும் சேர்ந்த ஒருவகை தின்பண்டம் (custord) சுவையூட்டும் கூட்டு, ஏனைய மசாலாப் பொருட்கள்.

3. உணவகம் ஒன்றில் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அல்லது அயல்நாட்டுத் தூதுவர்கள் அல்லது அயல்நாட்டு அரசுத் தூதுக் குழுக்கள் அளிக்கும் விருந்துகளுக்கும் அனைத்துநாட்டு மாநாடு கள் சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்படும் விருந்துகளுக்கும் இவ்வாணையின் விதித்துறைகளிலிருந்து அரசு விலக்களிக்கலாம்.

நாடு முழுவதும் தற்போதுள்ள உணவுப் பற்றுக்குறை காரண மாக, உணவகங்களில் உணவுகள் தயாரித்து வழங்கப்படுகையில் ஊதாரித்தனத்தைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் நோக்கத்துடன் இந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

4. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ், 974-75-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.